எதிர்காலத்திலே நிச்சயம் குறைக்கப்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

20—

கால்நடைத் தீவனம்

•23022—திருமதி ரா. லீமா றோஸ்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைத் தீவனத்தைக் குறைந்த விலையில் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கால்நடைத் தீவனத்தைக் குறைந்த விலையில் வழங்கும் திட்டம் ஏதும் தற்போதைய நிலையில் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களின் உயிர்நாடியான தொழிலாகக் கால்நடை வளர்ப்பு இருக்கின்றது. பெரும்பாலான ஏழையெளிய குடும்பங்களில் வருமானத்தை ஈட்டக்கூடிய வகையில் கோழி, ஆடு, மாடு, பசு போன்ற கால்நடைகளை வளர்க்கின்றார்கள். ஆனால், தற்பொழுது கால்நடைகளினுடைய எண்ணிக்கை குறைந்து வருகின்றது. இதற்குக் கால்நடைத் தீவனங்களின் விலையேற்றமும் காரணமாக உள்ளது. ஏற்கெனவே தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கால்நடைத் தீவனங்கள் விநியோகம் செய்யப்பட்டன.

2007 அக்டோபர் 19}

உதாரணமாக, ஆவின் கால்நடைத் தீவனம் ஒரு கிலோ ரூபாய் ஐந்து முதல் ஆறு வரைக்கும் விற்கப்பட்டது. ஆனால், தனியார் நிறுவனங்களின் மூலமாகத் தற்பொழுது ஒரு கிலோ 'கோத்ரேஜ்' தீவனம் விலை ரூபாய் ஒன்பதிலிருந்து பத்து வரைக்கும், ஒரு லிட்டர் பாலின் விலைக்குத் தகுந்தாற்போன்று ஏறியிருக்கின்றது. அதேபோன்று, ஒரு கட்டு வைக்கோல், ரூபாய் நூறு என விற்கப்படுகின்றது. ஆகவே, ஏற்கெனவே இருந்ததைப்போன்று, அரசே கால்நடைத் தீவனங்களை உற்பத்தி செய்து குறைந்த விலையில் கிடைக்க ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் தீவன உற்பத்தி மையம் எதுவுமே அமையப்பெறவில்லை. கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் உள்ள பண்ணைகளுக்குத் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் கால்நடைத் தீவனம் கொள்முதல் செய்து கால்நடைகளுக்குத் தீவனம் வழங்கப்படுகிறது. அதுபோலவே, பால் வளத் துறையின்கீழ் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்களுக்காகக் கால்நடைத் தீவனங்கள் விநியோகிக்கப்படுகின்றன என்ற தகவலை நம்முடைய உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அதேபோன்று கால்நடைகளுக்குத் தேவையான மருந்துப் பொருள்கள் இன்றைக்கு அதிகமான அளவு இல்லை. எப்பொழுதாவது கால்நடைகளைத் தாக்கக்கூடிய நோய்களுக்கு, Bernal என்று சொல்லக்கூடிய தேவையில்லாத மருந்துகள் இன்றைக்கு இருப்பில் இருந்துகொண்டிருக்கின்றன. அதேபோன்று, நபார்டு திட்டத்தின் மூலமாக வழங்கப்படக்கூடிய கருவிகள், அந்தக் கால்நடைகளைத் தாக்கக்கூடிய இரத்தத்தில் உள்ள குறைபாடுகள், அதாவது பாஸ்பரஸ், மக்னீசியம், கால்சியம் போன்ற நோய்களைக் கண்டறியக்கூடிய கருவியான Serum Analyser என்பது, தமிழகத்திலே இரண்டு மாவட்டங்களில் மட்டுமே இருந்து வருகின்றது. எனவே, தமிழகத்தினுடைய பல மாவட்டங்களில், குறிப்பாகக் கன்னியாகுமரி

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாவட்டத்தினுடைய மையப் பகுதியாக இருக்கக்கூடிய காட்டாத் துறையில் இந்த Serum Analyser என்று சொல்லக்கூடிய instrument-ஐத் தந்து கால்நடைகளைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டு முதல், அந்தந்தப் பகுதிகளிலுள்ள நோய்க் கிளர்ச்சி மற்றும் நோய்த் தாக்கத்திற்கேற்ப கால்நடைகளுக்கு மருந்து விநியோகம் ஒவ்வொரு மருந்தகத்திற்கும் செய்யப்பட வேண்டுமென்று இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதுபோல, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையான Serum Analyser என்ற அந்தக் கருவி கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கால்நடை மருந்தகத்திற்கும் வழங்குவதற்கு, வரும் நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110-ன்கீழ் அறிக்கை

எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா, 'மக்கள் குரல்', 'நமது எம்.ஜி.ஆர்.' மற்றும் 'ஜெயா டி.வி.' மீது எழுப்பிய உரிமைப் பிரச்சினையில், பத்திரிகைகள், தொலைக்காட்சிமீது வலியுறுத்தாதது குறித்த மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் . . . (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.